# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

## Tamil Study Centre - Mount Druitt

*Mobile: 0449 892 066*

*Email :*[*mtdruittts c@gmail.com*](mailto:mtdruitttsc@gmail.com) *Web :* [*www.mtsc.org.au*](http://www.mtsc.org.au)

# ஆண்டு 9 – பேச்சுப் போட்டி 2019

பேச்சுப் போட்டி எதிர்வரும் 01.06.2019 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.



அனைவருக்கும் என் இனிய வணக்கம் !

**“தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா”** என்ற இந்த அருமையான தலைப்பில் மிக பெருமையோடு பேசுவதற்காக உங்கள் முன் தலைநிமிர்ந்து நான் நின்றுகொண்டிருக்கின்றேன். ஏனென்றால் என் தாய்மொழி தமிழ். எனக்கு மட்டுமா இது தாய்மொழி? இல்லை இல்லை, இந்த உலகத்தின் எல்லா மொழிகளுக்கும் அன்னை மொழி தமிழே! இந்த உலகின் முதல் மனிதன் பேசிய மொழியும் தமிழே! அப்படியென்றால் இந்த உலகின் முதல் மனிதன் யார்? யார்?




## “தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா”

ஆம் தமிழன் தான் முதல் மனிதன். இதை நான் சொல்லவில்லை, மொழி ஆய்வாளர் திரு அலக்ஸ் கொல்லியர் மிக தெளிவாக நிரூபித்திருக்கிறார். இந்த உலகின் மொத்த மொழிகள் ஆறு ஆயிரத்து எண்னூற்றி ஒன்பது (6,0809) இதில் (700) எழுநூறு மட்டுமே பேசவும் எழுதவும் கூடியவை. அவற்றில் முதுமொழிகள் ஆறு மட்டுமே. இவை ஹீப்ரு (Hebrew), கிறீக் (Old creak), லற்றீன் (Latin), சமஸ்கிருதம் (Sanskrit), சைனீஸ் (Chinese), தமிழ் (Tamil).

இவற்றில் தற்போது நடைமுறையில் மூன்று மொழிகள் மட்டுமே எழுதவும், பேசவும் கூடிய மொழிகளாக இருக்கின்றன. அவை தமிழ், சைனீஸ், ஹீப்ரு. இந்த மூன்றில் முதல் மனிதன் பேசிய மொழி தமிழ்! இதனால் தான் தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழ் இன்பத்தமிழ், எங்கள் உயிருக்கு நேர், உயிருக்கு நேர் என்று பாவேந்தர் பாடினாரோ!

கிறீஸ்துவுக்கு முன் முப்பதாயிரம் (30,000) ஆண்டுகளுக்கு முன் தோன்றியது குமரிக்கண்டம். அவுஸ்திரேலியா – தென்னாபிரிக்கா வரை பரந்து விரிந்திருந்த அந்த தமிழ் உலகம் இன்று எங்கே?

கடலுக்கடியில் அமைதியாக உறங்கிக்கொண்டிருக்கின்றது. அதை கடல் அன்னை தன்னுள் இணைத்துக்கொண்டாள். அந்த குமரிக்கண்டத்தில் அன்று வாழ்ந்த மனிதன் – அந்த தமிழன் உலகின் பல பாகங்களில் வாழ்ந்திருக்கிறான் என்பதற்கு பல நாடுகளில் காணப்படும் கல்வெட்டுக்களும் சுவடுகளும் அழிக்க முடியாத ஆதாரங்கள்.!

எனவே **“தமிழன் என்று சொல்லடா**

**தலை நிமிர்ந்து நில்லடா”**

நன்றி,

வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திரு. சாமித்தம்பி கனகசிங்கம்.